**கொடகவெல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 23 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொடகவெல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்குரியதாக 2017 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 35,625 செலவினம் ஆண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோரில் சீராக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் செலவினம் மற்றும் கடன்கொடுத்தோர் என்பன அதே அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

‘‘தொறின் தொறட்ட கமின் கமட்ட’’ (கிராமத்திற்குக் கிராமம் வீட்டிற்கு வீடு) பொருளாதார அபிவிருத்திக்னான தேசிய திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் போது சபையினால் அமுல்படுத்தப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 9,597,505 தொகை சபையினால் செலுத்தப்பட

வேண்டியிருந்த போதிலும் 2016 நவம்பர் 11 ஆந் திகதி வரையிலும் உரிய பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 446(2) | காசேடு தினமும் சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் பேணப்படுகின்ற இரண்டு காசேடுகள் அவ்வாறு நாளாந்தம் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1992 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்கம் மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(I) ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் 2002 பெப்ரவரி 25 ஆந் திகதி 01/2002 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான எந்தவொரு வாகனத்திற்கும் அரச இலட்சணை மற்றும் சபையின் பெயர் என்பன பொறிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி | |
| IV(ஆ) பகுதியின் 05 ஆம் இலக்கத்தின் கீழ்வரும் உப விதி | அனுமதியற்ற நிர்மாணப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட 10 நிர்மாணங்கள் தொடர்பாக 2016 ஏப்ரல் வரையிலும் அந்த நிர்மாணங்களை அகற்றுவதற்கு |

அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு அறிவித்தல் மாத்திரம் அனுப்பப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட காலத்தின் பின்னர் உரிமையாளரினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருக்குமாயின் அந்த அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுதவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2017 சனவரி 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,889,563 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,932,743 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 3,956,820 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவு ரூபா 3,956,820 இனால் அதிகரித்தமை தொடர்பில் 02 வருமான விடயங்களில் ரூபா 4,229,721 அதிகரிப்பும், 02 செலவின விடயங்களில் ரூபா 2,328,677 குறைவும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பீடு செய்யப்பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 2,912 | 6,872 | 2,948 |
| வாடகை | 8,444 | 6,274 | 370 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,169 | 988 | 58 |
| ஏனைய வருமானம் | 48,257 | 42,052 | 14,085 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது வாடகை வருமானம், சேவைகளுக்கான கட்டணம், பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்பன முறையே 25 சதவீதம், 43 சதவீதம், 63 சதவீதம் மற்றும் 16 சதவீதம் என பாரியளவில் குறைவொன்றைக் காண்பித்தது.

### 2.3.3 ஆதனவரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசததிற்குரிய ஆதனங்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 03 ஆந் திகதிய மதிப்பீட்டின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டின் போது அனுப்பப்பட்ட ஆதனவரி அறிவித்தல் தொடர்பாக 57 நபர்களிடமிருந்து எதிர்ப்புக்கள் கிடைத்திருந்தன. அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் இனங்காணப்பட்டிருந்த ஆதனவரி அதிகாரப் பிரதேசத்திற்குரிய சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வாண்டு வரையில் 05 வருடங்கள் கடந்திருந்த போதிலும், ஆதனவரி அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,749,500 தொகையான நிலுவை ஆதனவரி மீதியொன்று காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 23 ஆந் திகதிய 1947 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சர்கஸ் காட்சி மற்றும் சங்கீத காட்சிகளின் அனுமதிச் சீட்டுக்களின் விற்பனை விலையில் 15 சதவீதம் களியாட்ட வரியாக அறவிட வேண்டியிருந்த போதிலும் சபை அதிகாரப் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட சர்கஸ் காட்சிகளிலிருந்து ரூபா 79,200 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வருடமும் ஏக்கர் வரி விதித்து அறவிடல் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் அறவிடல் உரிய பிராகரம் இடம்பெறாமையின் காரணமாக 2016 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 62,312 தொகை மீளாய்வாண்டிற்குரிய ரூபா 13,903 தொகைகள் அறவிட வேண்டியிருந்தன. அது முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட நிலுவை மீதியை விட 22 சதவீத அதிகரிப்பாகும்.

**2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

------------------------------------------------------

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 23 ஆந் திகதிய 1947 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்கான வியாபார வரி, கைத்தொழில் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றை அறவிடும் போது சபை அதிகாரப்பிரதேசத்தில் ஏதாவது வளாகமொன்றில் நடாத்தப்படுகின்ற வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட சகல வியாபாரங்களிலிருந்தும் / கைத்தொழில்களிலிருந்தும் வரி மற்றும் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு வரிக் கட்டணம் அறவிடவேண்டிய இடங்களை இனங்காண்பதற்கான மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 ஏனைய வருமானம்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள் மற்றும் கட்டிட கட்டளைகளில்

மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் V ஆவது பட்டோலையின் படி தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரம் நிர்மாணிக்கும் போது அறவிடவேண்டியிருந்த கட்டணங்களுக்கு முரணானதாக 04 நிறுவனங்களிலிருந்து ரூபா 489,825 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 2015/2016 ஆம் ஆண்டின் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பதாதைகளுக்குரிய 05 நிறுவனங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 165,500 தொகை 2017 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுப்பொருட்கள் அகற்றுதல் என்பவற்றுக்கான கட்டணங்களை அறவிடல், உப விதி விடயங்களுக்குரிய விடயமொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 நவம்பர் 10 ஆந் திகதி வரையிலும் கழிவுகள் அகற்றுதல் தொடர்பாக உப விதியொன்றை விதித்து அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

### 2.3.7 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 8,824,687 தொகையான நீதிமன்றத் தண்டப் பணம் 2016 ஒக்தோபர் 21 ஆந் திகதியளவில் மாகாணத் திறைசேரிக்குக் கிடைத்திருந்த போதிலும் அந்தப் பணத்தை மீளளிப்புச் செய்து கொள்வதற்கு 2017 மே வரையிலும் சபை தவறியிருந்தது.

(ஆ) எம்பிலிபிட்டிய காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2016 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 7,677,721 தொகையான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கும் இரத்தினபுரி காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கான பட்டோலையினைப் பெற்றுக் கொள்வதற்கும் தவறியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 3.1 செயலாற்றல்

-------------------------------

2016 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் மூலதனச் செலவினமாக பௌதீகத் திட்டமிடல், வீதிகள் மற்றும் காணியும் கட்டிடங்களின் கீழ் இனங்காணப்பட்ட 24 செயற்திட்டங்களுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 5,100,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அதில் 15 செயற்திட்டங்களை 2016 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு தவறியிருந்தது. மேலும் உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 சனவரி 18 ஆந் திகதிய CLG/01/2016 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட ஆலோசனைகள் படி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக உரிய அங்கீகாரம் ஆணையாளர் / செயலாளர் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மேற்கொள்ள வேண்டுமென அறிவித்திருந்த போதிலும், சபையினால் 2016 ஆகஸ்ட் முதல் 2016 திசெம்பர் வரை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்ட ரூபா 7,663,636 தொகையான 06 வேலைகளுக்குத் தேவையான அங்கீகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

----------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான பலவின்ன பண்ணையின் பாதுகாப்பு மற்றும் நிர்வாகங்களை இலகுவாக்குவதற்காக அந்தக் காணியில் பாதுகாப்பு கொட்டகை மற்றும் களஞ்சிய அறையொன்று என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 621,651 தொகையான மதிப்பீடு உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் அனுப்பப்பட்டு 02 வருடங்களுக்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதிலும் அதற்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------------

2015 மார்ச் 27 ஆந் திகதிய 1907/50 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் உத்தியோகபூர்வ செல்லுபடிக் காலம் 2015 மே 15 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும், 14 உறுப்பினர்களுக்காக 2015 மே மாதத்திற்குரிய முழுமையான உறுப்பினர் படியாக கூட்டுமொத்தமாக ரூபா 220,000 தொகையும், மொத்த எரிபொருள் படியாக ரூபா 70,000 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா

290,000 செலுத்தப்பட்டமையினால் ரூபா 145,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 கழிவுப்பொருள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்ட இடத்தில் வெட்டப்பட்டிருந்த பாரியளவிலான குழியில் கழிவுகள் அகற்றப்பட்டு 03 நாட்களுக்கு ஒரு தடவை கழிவுப்பொருகளுக்காக குழிவெட்டும் போது அகற்றப்பட்ட மண் போடப்பட்டு மூடப்பட்டுக் கொண்டிருந்தது.

(ஆ) கழிவுப்பொருள் அகற்றப்பட்ட இடம் சபைக்குச் சொந்தமான காணியொன்றாக இல்லாதிருந்ததுடன் அந்தக் காணியை சபைக்கு கையேற்கும் செயற்பாடுகள் மெதுவான போக்கில் காணப்பட்டது. கழிவுப்பொருள் அகற்றப்படுகின்ற இடத்திற்காக பெறவேண்டியிருந்த சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்குரிய சுற்றாடல் சிபாரிசுகள் 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய சிபாரிசுகள் அமுலாக்கப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதன் காரணமாக சில வருடங்கள் முதல் சுற்றாடலுக்கு பாதகமாக தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்பட்டுக் கொண்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் 25 செலவின விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 3,453,500 தொகையான மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் 25 செலவின விடயங்களில் கூட்டுமொத்தமாக ரூபா 3,666,072 மொத்த நிதிஏற்பாட்டில் 45 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) செலவுகள் இனங்காணப்படாமை<br>(ii) பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | நிர்ணயிக்கப்பட்ட வருமானங்கள் அறவிடப்படாமை |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம் | கழிவுப்பொருள் அகற்றும் முறைமை சுற்றாடலுக்கு பாதகமாக இருந்தமை. |